N-06

# பெறுகை அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

## ஒப்பந்த இலக்கம்: DGP/OS/04/clean.s./2023 - 2024

## சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளல்

கொழும்பு -08 டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த இல. 118இல் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத் வளகத்தில் உத்தேச இடத்துடன் சம்பந்தப்பட்ட சுத்திகரிப்புச் சேவைகளை நடத்திச் செல்வதற்காக கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் ஒருவருட காலத்திற்கு (2023/2024) தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக பூர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள் கீழ்க்காணுமாறு அமையும்.

1. வியாபாரத்தின் பெயர் பதிவு செய்யும் சட்டவாக்கத்தின் கீழ் மேற்படி சேவைக்காக பதிவு செய்திருத்தல்
2. அரச அமைச்சு, திணைக்களம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் பற்றிக் குறைந்த பட்சம் கிட்டிய 03 வருட அனுபவம் இருப்பதுடன் தற்போது அவ்வாறான நிறுவனங்களுக்கு சேவை வழங்கும் நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
   (கவனிக்கவும்:- விண்ணப்பத்துடன் மேற்படி இல. 1, 2 தகைமைகள் குறிப்பிடப்படும் சன்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.)
3. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அரச அச்சுத் திணைக்களத்தின் அரசாங்க அச்சகத்தின் பெயர் எழுத்துமூல வேண்டுதல் மேற்கொள்ளல் வேண்டும். மேற்படி வேண்டுதலின் பின்னர் மீளளிக்கப்படாத ரூ. 2,500.00 தொகையை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்த பின்னர் 2023.05.10 முதல் 2023.05.30 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் ஏனைய வழங்கல்கள் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் இக் கேள்வி ஆவணங்களை காசு செலுத்தாமலேயே பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. கேள்விதாரர் தமது கேள்வியுடன் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வர்த்தக வங்கியில் இருந்து அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் 'அரசாங்க அச்சகர்' பெயரில் ரூ. 100,000.00 கேள்விப் பிணையொன்றை/ வங்கிப் பிணையொன்றை அல்லது மேற்படி பெறுமதியை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் காசாளர் கருமபீடத்திற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் அடங்கிய விண்ணப்பங்களை உறையொன்றில் இட்டு, 2023.05.31 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது திணைக்களத்தின் ஏனைய வழங்கல் கள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். உங்களது கேள்விகள் சமர்ப்பிக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அரசாங்க அச்சுத திணைக்களத்தின் சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்வி 2023/2024' என்று குறிப்பிடுதல் வேண்டும். 2023.05.31 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைவதுடன் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். இவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது பிரதி நிதி ஒருவருக்கு சமுகமளிக்கலாம்.
6. பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2023.05.24 பி.ப. 10.00 இற்கு திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
7. மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.30 வரை கீழ்க்காணும் முகவரியில் குறிப்பிடப்படும் அலுவலகத்தின் ஏனைய வழங்கல்கள் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டெக்டர் டென்ஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு -08.**

2023.05.10

**தொலைபேசி: 011 2673311/ பெக்ஸ்: 011 2698653**
**இணைய தளம்: www.documents.gov.lk**
**மின்னஞ்சல்: othersupplydgp@gmail.com**